


திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி சீவல்சரகு கிராமத்தில் இயங்கி வரும் " ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் " 2025 – 2026 " ஆம் கல்வி ஆண்டிற்கான முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழாவினை அமைச்சர் இ.பெரியசாமி தொடங்கி வைத்து மாணவர்களிடையே உரையாற்றினார்.உடன் கூட்டுறவுத்துறை உயரதிகாரிகள், கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள், பெற்றோர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று (25.07.2025) சென்னை, அடையாறு முகத்துவாரத்தில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை சார்பில் சர்வதேச சதுப்பு நில சூழல் அமைப்பு பாதுகாப்பு தின விழா 2025 முன்னிட்டு அலையாத்தி தோட்டம் எழுப்புதல் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத் முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் முனைவர் எம். ஜெயந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் முதலமைச்சர் அறிவித்துள்ள 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமினை மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் திருநாவுக்கரசர் மண்டபத்தில் தொடங்கி வைத்து மனுக்களை பெற்று கொண்டார். உடன் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகர்மன்ற தலைவர் சிவஆனந்தி ரமேஷ், நகரச் செயலாளர் வாள் சுடலை, நகர் மன்ற உறுப்பினர்கள் ஆனந்த், மணல்மேடு சுதாகர், செந்தில், அரசு துறை அதிகாரிகள், பொது மக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி திருப்பரங்குன்றம் வடக்கு ஒன்றியத்துக்குட்பட்ட கொடிமங்கலம் மற்றும் தாராப்பட்டி கிராமங்களில் வசிக்கும் பொது மக்களுக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் ஆர்.கே.ஜெயராமன், சிறைச்செல்வன், பேரூர் செயலாளர் ராசாமணி, கழக நிர்வாகிகள் வெற்றிச்செல்வன், அன்புச்செல்வன், ஐயப்பன், சிவமுருகன், செந்தில் உள்ளிட்ட திரளான கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.



விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி சி.எஸ்.ஐ. சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் துவக்கி வைத்து இந்த முகாமில் பதிவு செய்த பயனாளிகளுக்கு உடனுக்குடன் பிறப்பு சான்றிதழ், பட்டா பெயர் மாற்றம் போன்ற உதவிகளை வழங்கினார். இந்த முகாமில் நகராட்சி நிர்வாகம், வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை, வேளாண்மைத் துறை மற்றும் தொழிலாளர் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் கீழ் பொது மக்களிடம் இருந்து மனுக்களைப் பெற்று தீர்வு காணப்பட்டது. உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜா, சிவப்பிரகாசம், நகரச் செயலாளர் ஏ.கே.மணி, நெசவாளர் அணி பழனிச்சாமி, தெற்கு மாவட்ட தி.மு.க. துணை அமைப்பாளர் பாபுஜி, 5 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் டுவிங்கிளின் ஞான பிரபா, வார்டு செயலாளர் டேனியல் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், அரளிக்கோட்டை ஊராட்சி பகுதியிலுள்ள சமுதாயக்கூடத்தில் நேற்று முன்தினம் (24.7.2025) நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, மற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமையில் நேற்று (25.07.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத் துறை வளாகக் கூட்டரங்கில் 2025ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரித் துறைஆணையர் எஸ்.நாகராஜன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி மொ.நா. பூங்கொடி, மற்றும் வணிகவரித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் நேற்று (25.07.2025) நடைபெற்ற 2025ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தமிழ்நாடு வணிகர் நலவாரியம் சார்பில் மறைந்த வணிகர்களின் குடும்பத்தினர் மூன்று நபர்களுக்கு ரூ.3,00,000 க்கான காசோலைகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரித் துறை ஆணையர் எஸ். நாகராஜன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி மொ.நா. பூங்கொடி, நலவாரிய முதன்மைச் செயல் அலுவலர் / கூடுதல் ஆணையர் அ.பா.தேவேந்திர பூபதி மற்றும் வணிகவரித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளராக மூன்றாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் வே.ஜெயபாலனுக்கு மாவட்ட தி.மு.க. பிரதிநிதி ரகுமத்துல்லா பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.